மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவனமாக நின்றனர்.

2. வினக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினக்கள்

கோவை மருத்துவ மனை ஊழியர்களுக்கு நிகராடை

*276. வின—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட மருத்துவ மனையில் பணிபுரிகின்ற (1) M.N.Os. (2) F.N.Os. (3) வாட்டர்மேன், (4) சேனிட்டரி ஒர்க்கர் ஆகியோருக்கு 1970-ம் ஆண்டில் உடை வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், இக் குறையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) 1970-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முதல் ஜூலை திங்கள் வரை கடைநிலை ஊழியர்களாகிய செவிலிப்பணி உதவியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள், சிற்றூழியர்கள், கடைநிலை ஊழியர்கள் முதலியவர்களுக்கு நிகராடைகள் வழங்கப்பட்டன. வழங்குவதில் சுணக்கம் ஏதுமில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, செவிலிப் பணி உதவியாளர்களுக்குச் சீருடை வழங்கவில்லை என்று அரசுக்குப் புகார் ஏதாவது வந்ததா? அவர்களுக்கு ஆண்டொன்றுக்கு எத்தனை முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஒரு முறைக்குமேல் வழங்குவதற்கு இடம் இருக்காது. ஆனல், 1970-ம் ஆண்டு பிப்ரவரித் மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையில், கோயம்புத்தூரிலுள்ள டி.எஸ். அண்ட் பி. லேடீஸ் கார்மென்ட் மேக்கர்ஸ் கோவாப்பரேடிவ் காட்டேஜ் இன்டஸ்ட்ரியல் சொஸைட்டியிடமிருந்து அந்த உடைகள் மூன்று நான்கு மாத காலம் தொடர்ந்து கிடைத்த காரணத்தால், அது கிடைத்து வந்த கால அளவிற்கேற்ப, உடனுக்குடன் வழங்கப்பட்டன,

பிப்ரவரி மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரையில் அந்த ஆண்டுக்குரிய உடைகள் வழங்கப்பட்டுவிட்டன என்ற குறிப்பு அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

Representation from Pharmacists Association

*277 *Q.*—THIRU A. SWAMIDASS

DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Pharmacists Association has submitted any memorandum to the Government order about 28th January 1971 ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் திட்ட இயக்குநருக்கு 17—2—1971 அன்று ஒரு மனு கிடைக்கப்பெற்றது.

(இ) அந்த மனுவில் கண்ட கோரிக்கைகள் கீழ் வருமாறு அமைந்திருந்தன—

(1) சம்பள விகிதத்தை உயர்த்தல்.

(2) பதவி உயர்வுக்கான வாய்ப்புக்கள் அளித்தல்;

(3) குடியிருப்பு வசதிகள் அமைத்தல்;

(4) வாராந்திர விடுப்பு எடுப்பதற்கு விடுப்பு ஒதுக்கு இடங்கள் ஏற்படுத்துதல்;

(5) எழுத்துப்பணி படியினை உயர்த்துதல்.

(6) சங்கக் கட்டடம் கட்டுவதற்கு சென்னையில் ஒரு இடம் ஒதுக்குதல்;

திரு. எ. சுவாமிதாஸ் : இந்த பார்மஸிஸ்டுகளினுடைய கோரிக்கைகளில் எவையேனும் ஏற்றுக்கொள்ளப்பட்டனவா? அவற்றைப்பற்றி அரசாங்கம் ஆராய்ந்ததா என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அவர்களுடைய கோரிக்கைகள் முறைப்படி அரசாங்கத்தினுடைய அந்தத் துறையினரால் ஆராயப்பட்டிருக்கின்றன. சம்பள